பதிவு எண் M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., பி.எல்.

மலர்: 20] சென்னை: ஆவணி 9 (25—8—72) வெள்ளி

வெளியூர்: ஆவணி 10 (26—8—72) சனி [இதழ்: 61

நிலமற்ற தொழிலாளர்களுக்குக் குடியிருப்பு வசதி

தமிழக அரசு திட்டம்

தஞ்சை, ஆக. 25—

கிராமங்களில் நிலமில்லாத தொழிலாளர்களுக்கு வீட்டுவசதி அளிக்கும் திட்டம் ஒன்றைத் தமிழ்நாடு அரசு தயாரித்திருக்கிறது; இந்தத் திட்டத்துக்கு மத்திய

(4-ம் பக்கம் பார்க்க)

சட்டப் பேரவையில் முதலமைச்சர் கலைஞர் விளக்கம்

பிச்சைக்காரர்கள் மறுவாழ்வு நிதி ஒரு நீரோடையாம்—அமைச்சர்கள் அதில் நீந்திக் குளிக்கிறார்களாம்

எரிச்சல் கொண்ட ஏடுகள் மாசு கற்பிக்க முயல்கின்றன

நற்பணிகளுக்குச் சேர்ந்த நிதிகளுக்கெல்லாம் முறையான கணக்குகள் சீராக இருக்கின்றன

ஆதாரமில்லாமல் குறை கூறுவோர் இதனை உணருவது அவசியம்

சென்னை, ஆக. 25—

" மக்களிடமிருந்தெல்லாம் — செல்வம் படைத்தவர்களிடமிருந்தெல்லாம் பணம் பெற்று கண் சிகிச்சை முகாம் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்பதுதான் அரசின் எண்ணமாகும்; அந்த அடிப்படையில், இதை ஒரு தீவிரத் திட்டமாக அரசு உருவாக்கியிருக்கிறது; ஏற்கனவே ஆண்டு ஒன்றுக்கு ஐநூறு பேர் — ஆயிரம் பேர் — இரண்டாயிரம் பேர் என்ற அளவுக்குத்தான கண் சிகிச்சை முகாம்கள் மூலமாக இது நடைபெற்றுக்கொண்டிருந்தது.

" ஒரு சில பணக்காரர்கள் இந்தக் காரியத்தை ஏதோ ஒரு உபயம் போல — தர்மம் போலச் செய்துவந்தார்கள்; இந்தப் பணியை அரசாங்கமே ஏற்றுக்கொண்டு, ஆண்டு ஒன்றுக்கு ஓர் இலட்சம் பேருக்குக் கண் சிகிச்சை அளிப்பது என்பது விளையாட்டான காரியம் அல்ல!

" அதுமாத்திரமல்ல; எடுக்கப்பட்ட கணக்குகளின்படி, தமிழ்நாட்டில் ஏழை எளிய மக்கள் பத்து இலட்சம் பேர் கண்ணொளி இழந்து தவிக்கிறார்கள்; அந்தப் பத்து இலட்சம் பேருக்கு நாலைந்து ஆண்டுக்காலத்தில் இந்த உதவியைச் செய்து முடிக்க வேண்டுமென்றும், அதற்குப் பிறகும் தொடர்ந்து இந்தத் திட்டத்தை நிறைவேற்றி வருவது என்றும் திட்டமிட்டு, இந்த ஆண்டில் ஓர் இலட்சம் பேருக்கு இந்த நற்பணியைச் செய்வது என்று அரசு முன்வந்திருக்கிறது "

—என்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள், நிதி ஒதுக்கல் மசோதா மீது நடைபெற்ற விவாதத்திற்குப் பதிலளிக்கையில் தெள்ளத் தெளிவுற விளக்கிக் கூறினார்; பிச்சைக்காரர் மறுவாழ்வுத் திட்டம் — கண்ணொளி வழங்கும் திட்டம் ஆகிய நற்பணிகளுக்காகத் திரட்டப்படும் நிதிகள் பற்றித் தவறாகவும் — ஆதாரமின்றியும் எழுதியும் — பேசியும் வரும் போக்கினைக் குறித்து அவர் குறிப்பிடுகையில் கூறியதாவது:—

' இதுபோன்ற நல்ல காரியத்திற்காக நிதி சேர்க்கின்ற நேரத்தில், 'இவற்றுக்கெல்லாம் கணக்கு உண்டா—வழக்கு உண்டா' என்று சில பத்திரிகைகள் — எரிச்சல் கொண்ட பத்திரிகைகள் எழுதுகின்றன; பல பெரியவர்கள்கூட - அவர்கள் நடத்தும் பத்திரிகைகளில், 'இதற்கெல்லாம் கணக்குக் கிடையாது, பிச்சைக்காரர் மறுவாழ்வு நிதி ஒரு பெரிய நீரோடை; அதிலே எல்லா அமைச்சர்களும் நீந்திக் குளிக்கிறார்கள்' என்பது போன்ற கேலிச் சித்திரங்கள் எல்லாம் போடுகிறார்கள்!

" இந்த நிதிகளைக்கொண்டு செய்கின்ற பணிகளுக்கெல்லாம் சட்டமன்றத்திலே அனுமதி பெறுகிறோம்; அனுமதி பெறுகின்ற காரணத்தால் அக்கவுண்டெண்டு-ஜெனரல் தணிக்கைக் குழுவுக்கு அந்தக் கணக்கு உட்படுகிறது; அதற்கு மேலும் அந்த நிதிகளின் வரவு-செலவுக் கணக்குகள் எக்சாமினர் ஆப் லோக்கல் பண்ட் அக்கவுண்ட்'சால் தணிக்கை செய்யப்படுகிறது; அரசுக் கணக்கில ரிசர்வ் பாங்கியில் பணம் இருக்கிறது; நிதித் துறைத் துணைச் செயலாளர் பொருளாளராக இருந்து பணிபுரிந்து வருகிறார்.

(இதன் தொடர்ச்சியை 4-பக்கத்தில் காண்க)

அரசியல் பண்பாடு—அரசியல் நாகரிகம்

எங்கே போகிறது என்பதை எண்ணிப் பார்ப்பது அவசியம்

சென்னை, ஆக. 24—

பொதுக்கூட்ட மேடைகளில் பேசுகின்றவர்கள், எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் — குறிப்பிட்டதோர் கட்சியைச் சொல்லவில்லை - நம்முடைய பண்பாடு, பெருந்தன்மை, நாகரிகம் ஆகியவற்றைக் காப்பாற்றக்கூடிய அளவுக்குப் பேசப் பழகிக்கொள்ள வேண்டும்.

' இன்று காலை 'இந்து' பத்திரிகையில் ஒரு பெருந் தலைவர் பேசியதாகச் செய்தி வந்திருக்கிறது; 'மதுரை மாநாட்டின் கிளைமாக்ஸ் — மதுரை மாநாடே நாடகம் — அதிலே கிளைமாக்ஸ் கட்டம் கதாநாயகன் கருணாநிதி மயக்கமுற்று விழுந்தது — இதெல்லாம் அவர்களுடைய தவறுகளை மறைக்கச் செய்யும் நாடகம்' எனப் பெருந் தலைவர் — அகில இந்தியக் கட்சியின் பெருந் தலைவராக இருந்தவர் — பேசியிருக்கிறார்.

" எனக்கு நோய் வந்ததைப் பற்றிப் பெருந் தலைவராக இருக்கின்றவர் இந்த அளவுக்குப் பேசியிருக்கிறார் என்றால், தமிழ்நாட்டில் அரசியல் பண்பு — அரசியல் நாகரிகம் வெகு வேகமாக எங்கே போய்க்கொண்டிருக்கிறது என்பதை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும்."

—முதலமைச்சர் கலைஞர்
(சட்டப் பேரவையில்)

மணலியில் ஏற்பட்ட தீ விபத்து

மொத்தச் சேதம் பற்றி முதலமைச்சர் தகவல்

சென்னை, ஆக. 24—

சென்னைக்கருகிலுள்ள மணலி எண்ணெய்த் தூய்மைப்படுத்தும் ஆலையில் அண்மையில் ஏற்பட்ட தீ விபத்து பற்றிச் சட்டப் பேரவையில், டென்னிஸ் (ப.காங்) கவன ஈர்ப்புத் தீர்மானம் ஒன்று கொண்டு வந்தார்.

தீர்மானத்தின்மீது முதலமைச்சர் கலைஞர் அவர்கள் பேசுகையில் கூறியதாவது:—

" அந்தத் தீ விபத்தினால் ரூ. 2,70,000 பெறுமானமுள்ள உயர்ந்த ரக மண்ணெண்ணெய் வீணாகிவிட்டது; எண்ணெய்த் தொட்டிக்கு ஏற்பட்ட சேதம் ரூ. 6,50,000 ஆகும்.

மொத்தச் சேதம் ரூ. 16,65,500 ஆகும்.

தீ விபத்துக்கான காரணத்தை அந்த தொழிற்சாலை நிபுணர்கள் ஆராய்ந்து வருகிறார்கள்."

நைலான் வலை தொழிற்சாலை

சென்னையில் நிறுவ ஏற்பாடுகள்

சென்னை, ஆக. 24—

கேள்வி:— " தமிழ் நாட்டில் நைலான் வலை தயாரிக்கும் தொழிற்சாலை நிறுவும் எண்ணம் அரசுக்கு உண்டா? எப்போது — எந்த மாவட்டத்தில் நிறுவப் படும்?"

அமைச்சர் சத்தியவாணிமுத்து:— " ஆம்; வேளாண்மைத்தொழில் கழகம், சென்னையில் நைலான் வலை தயாரிக்கும் தொழிற்சாலை நிறுவ இருக்கிறது; இதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன."

கா. வேழவேந்தன்:— " இந்தத் தொழிற்சாலை, வட செங்கற்பட்டு பகுதியில் நிறுவப்படுமா?"

அமைச்சர்:— " சென்னையில்தான் அத் தொழிற்சாலையை நிறுவுவதற்கான வாய்ப்புகள் உள்ளன; இங்கு தயாரிக்கப் படும் வலைகள் தமிழ்நாடு முழுவதும் உள்ள மீனவர்களுக்கு வழங்கப்படும்."

மேலவை ஆசிரியர் தொகுதித் தேர்தலில்...

தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்கும் வாக்குரிமை வழங்க அனுமதிக்குமாறு மத்திய அரசுக்குக் கோரிக்கை

சட்டமன்ற மேலவையில் முதலமைச்சர் தகவல்

'ஆசிரியர்கட்கு இடம் தேவையில்லை' என மத்திய அரசு தடை விதித்ததற்குக் காரணம் பற்றி விளக்கம்

சென்னை, ஆக. 23—

"மேலவை ஆசிரியர் தொகுதித் தேர்தலில், தொடக்கப் பள்ளி ஆசிரியர்கட்கும் வாக்குரிமை வழங்க அனுமதிக்குமாறு மத்திய அரசைக் கோரி எழுதுவதாக இருக்கிறோம்"

என்று சட்டமன்ற மேலவையில் முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தெரிவித்தார்.

"அரசுப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்கள், மேலவை ஆசிரியர்கள், தொகுதியில் போட்டியிடுவதிலிருந்து தடைப்படுத்தப்பட்டுள்ளனரா? 'ஆம்' எனில், அதன் காரணங்கள் என்ன? இந்த விதியைத் தளர்த்தும் செயற் குறிப்பு உள்ளதா?"

என்று டி. சந்தோசம் கேட்டார்; இதையொட்டி எழுந்த துணைக் கேள்விகளுக்குப் பதிலளிக்கையிலேயே முதலமைச்சர் இவ்வாறு கூறினார்.

மேலும் இதுபற்றி அவர் கூறியதாவது:—

"அரசுப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்கள் இந்திய அரசியல் சட்டம் மற்றும் தேர்தல் சட்ட விதித் துறைகளின்படி நாடாளுமன்றம் அல்லது மாநிலச் சட்டமன்றத்திற்கு நடைபெறும் தேர்தல்களில் வேட்பாளராக நிற்பதற்குத் தகுதி இழந்தவர்களாகிறார்கள்; அரசுப் பணியாளர் நல்லொழுக்கத்திற்கான விதியும், அரசு ஊழியர்கள் இம்மன்றங்களுக்கு நடைபெறும் தேர்தல்களில் வேட்பாளராக நிற்பதைத் தடை செய்கிறது; இந்த விதியைத் தளர்த்தும் செயற் குறிப்பு ஏதுமில்லை."

இராஜா அய்யர்:—"தொடக்கப் பள்ளி ஆசிரியர்கட்கு மேலவைக்கு நடைபெறும் ஆசிரியர் தொகுதித் தேர்தலில் வாக்குரிமை வழங்க அனுமதிப்பது பற்றி பரிசீலனை செய்யப்படுமா?"

முதலமைச்சர்:— "இதுபற்றிப் பழைய காங்கிரசு அரசு 31—3—66-ல் மத்திய அரசுக்கு எழுதிய கடிதத்தில், 'ஆசிரியர்கள் அரசியலில் பங்கேற்று, நாடாளுமன்றத்திற்கும் -- மாநிலச் சட்டமன்றத்திற்கும், போட்டியிட முன்வருவதைத் தடை செய்ய வேண்டும்' என்றும், 'மேலவையில் ஆசிரியர்களுக்கான இடம் இருக்கும் பகுதியை நீக்கச் சட்டத் திருத்தம் செய்ய வகை செய்ய வேண்டும்' என்றும் எழுதியிருந்தது; அவ்வாறே அதற்கு மத்திய அரசு தடை செய்து உத்தரவிட்டது; ஆனால் இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு, 'இது நல்லதல்ல; மேலவையில் ஆசிரியர்களுக்கான இடம் நீடிக்க வேண்டும்' என்று வலியுறுத்தியது; இந்த நேரத்தில், 'தொடக்கப் பள்ளி ஆசிரியர்கட்கும் வாக்குரிமை வழங்க அனுமதிக்க வேண்டும்' என்று மத்திய அரசிடம் கேட்டதற்கு, 'உங்கள் அரசு, ஏற்கனவே இந்தப் பழைய இடமே தேவையில்லை என்று கேட்டிருக்கிறபோது, தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்கு ஓட்டுரிமை கேட்கிறீர்களே' என்று எழுதியது; என்றாலும், நாங்கள் மீண்டும் அதை வலியுறுத்தி எழுதுவதாக இருக்கிறோம்."

வெங்காயப் பிரச்சினை

சென்னை, ஆக. 24—

"வெங்காயத்தைத் தின்றால், இருதயக் கோளாறு குறைகிறது என்கிறார்கள்; ஆகவே வெங்காயத்தை உண்ணும்படி அரசே பிரச்சாரம் செய்யுமா?"

என்று, சட்டப் பேரவையில், கோவை செழியன் வினவினார்.

அமைச்சர் அன்பழகன்:—"அந்தப் பொறுப்பை நானே ஏற்றுக் கொள்கிறேன்."

டி. என். அனந்தநாயகி:—"வெங்காயம் விலை ஏறிக்கொண்டே போகிறது; நமக்கு இல்லாமல், ஏற்றுமதியா?"

அமைச்சர் மன்னை நாராயணசாமி:—"உற்பத்தியாகின்றபோது சற்று விலை குறையும்; பிறகு ஏறத்தான் செய்யும்; விலையைக் கட்டுப்படுத்த மத்திய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது."

பக்கிங்காம் கால்வாய் தூர்க்கப்படுமா?

அமைச்சர் சாதிக்பாட்சா மறுப்பு

சென்னை, ஆக. 23—

"சென்னையிலுள்ள பக்கிங்காம் கால்வாயைத் தூர்த்துவிட்டு அங்கே பாதாள இரயில் போக்குவரத்தை ஏற்படுத்தவும், துரிதப் போக்குவரத்தினை துவக்கவும் திட்டக் குழுவின் நகர் போக்குவரத்து ஆராய்ச்சிக் குழு ஆலோசனை ஏதும் கூறியிருக்கிறதா?"

என்று சட்டப் பேரவையில், கழக உறுப்பினர் சௌந்தரபாண்டியன் வினவினார்.

அமைச்சர் எஸ். ஜே. சாதிக்பாட்சா:—"இல்லை; ஆனால், கால்வாயையொட்டி இரயில் பாதை அமைக்கலாம் என்று இரயில்வேத் துறை கருத்துத் தெரிவித்திருக்கிறது.

"கால்வாயைத் தூர் வாரி விட்டுப் படகு போக்குவரத்துக்கு ஏற்பாடு செய்யலாம் என்ற கருத்தும் இருக்கிறது."

பென்ஷன்கோரி மனுச் செய்ய காலவரம்பு இல்லை

புதுடில்லி, ஆக. 25—

"சுதந்தரப் போராட்ட வீரர்கள் பென்ஷன் கோரி மனுச் செய்வதற்குக் காலவரம்பு எதுவும் கிடையாது; இனியும், அவர்கள் மனுச் செய்யலாம்"

என்று மக்களவையில் ஒரு கேள்விக்கு அரசுத்தரப்பில் பதில் அளிக்கப்பட்டது.

"மனுச் செய்ய சுதந்தரப் போராட்ட வீரர்களுக்கு வசதிகள் செய்து தரும்படி மாநில அரசுகளிடம் கூறப்பட்டிருக்கிறது; போக்குவரத்து மற்ற வசதிகள் இல்லாததால் சிலர் மனுச் செய்ய முடியாமல் இருக்கலாம்" என்றும் கூறப்பட்டிருக்கிறது.

ஏழைகளுக்குப் புதிய காலணிகள்

சென்னை, ஆக. 25—

கிண்டி மத்திய காலணிகள் பயிற்சி நிலையத்தின் ஆராய்ச்சி -- மேம்பாட்டுப் பிரிவினர், புதிய ரக செருப்புகளை உருவாக்கியுள்ளனர்.

காலணிகள் அடிக்கட்டைகள் -- பட்டைகள் சேதாரங்களைப் பயன்படுத்திப் புதியமாதிரியான செருப்புகளை உருவாக்கியுள்ளனர்.

நடுத்தர வருமான வர்க்கத்தினர் -- ஏழைகள் பயன்படுத்தக்கூடிய உழைப்புள்ள மலிவு செருப்புகள் இவை.

சிறு தோல் தொழில் பட்டறைகள் இப்புதிய முறையில் காலணிகளைக் குறைந்த செலவில் தயாரிக்க முடியும்; இலாபமும் -- வேலை வாய்ப்பும் பெருகும் என்று கருதப்படுகிறது.

கடலூர் சிறையில் மேற்குவங்கக்கைதிகள்

சென்னை, ஆக. 24—

"ஜூலை 20-ம் நாள் நிலவரப்படி 563 மேற்கு வங்க சிறைக் கைதிகள், கடலூர் மத்திய சிறையில் இருந்தனர்; அவர்கள் அனைவரும் நாட்டுப் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் அங்கு கைது செய்யப்பட்டவர்கள்; அவர்களுக்காகும் செலவை மேற்கு வங்க அரசு ஏற்கிறது"

என்று சட்டமன்ற மேலவையில், சட்ட அமைச்சர் செ. மாதவன் தெரிவித்தார்.

தமிழக அரசு வலியுறுத்தல்

சட்டம் இயற்றுவதற்கு டில்லி இணங்கியது

திரைப்பட ஸ்டுடியோ தொழிலாளருக்கும் நலச் சட்டங்கள்

சென்னை, ஆக. 25—

"திரைப்படப் பிடிப்பு ஸ்டுடியோக்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கும் தொழிலாளர் நலச் சட்டங்களைப் பொருந்துமாறு வகைசெய்யும் திட்டம் எதுவேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?"

என்று, சட்டப்பேரவையில் கேள்வி ஒன்று எழுப்பப்பட்டது.

அமைச்சர் என். வி. நடராசன்:—"இல்லை; அந்தச் சட்டம் இயற்றும் பொறுப்பு மத்திய அரசிடம் இருக்கிறது"

தேவேந்திரன்:—"திரைப்பட உலகிலிருப்பவர்களுக்கான சட்டம் விரைவில் இயற்றப்பட வேண்டும் என்பதை இந்த அரசு மத்திய அரசிடம் கடுமையாக எடுத்துக் கூறுமா?"

அமைச்சர்:—"அவ்வாறு இந்த அரசு வலியுறுத்தியதால்தான், அந்தச் சட்டத்தை இயற்றுவதற்கு மத்திய அரசு ஒப்புக் கொண்டிருக்கிறது.

கோவில்களில் தீ விபத்துப் பிரச்சினை

சட்டப் பேரவையில் கேள்விகள் -- அமைச்சர் கண்ணப்பன் பதில்

சென்னை, ஆக. 24—

'1972 சனவரியில் இராமேசுவரம் கோயிலில் தீவிபத்து ஏற்பட்டதா? 'ஆம்' எனில், அதனால் ஏற்பட்ட நட்டம் எவ்வளவு?"

என்று சட்டப் பேரவையில், சௌந்தரபாண்டியன் வினவினார்.

அமைச்சர் மு. கண்ணப்பன்:—"ஆம்; சுமார் ரூ. 1 இலட்சம் நட்டம் என மதிப்பிடப்படுகிறது."

அனந்தநாயகி (இ. காங்.):—"கடைகள் கட்டப்பட்டு வாடகைக்கு விடப்படும் கோவில்களில் தீ விபத்து ஏற்படுகிறது; ஆகவே, அப்படிப்பட்ட கோவில்கள் இன்சூரன்சு செய்யப்படுமா?"

அமைச்சர்:—"அப்படி உத்தேசம் இல்லை."

சங்குமுத்து தேவர்:—"தமிழ்நாட்டில் கோவில்களில் அடிக்கடி ஏற்படும் தீவிபத்துகளுக்கு, 'தர்மகர்த்தா போட்டியும் ஒரு காரணம்' என்று பரவலாகப் பேசப்படுவது அரசுக்குத் தெரியுமா?"

கண்ணப்பன்:—"எங்கு என்று திட்டவட்டமாகச் சொல்லாமல், 'பரவலாகப் பேசப்படுகிறது' என்று கூறுவதை ஏற்பதற்கில்லை."

கந்தசாமி:—"தீ விபத்துக்குப் பிறகு இராமேசுவரம் கோவில் பராமத்து செய்யப்படுகிறதா?"

அமைச்சர்:—"உடனடியாகத் திருப்பணி வேலைகள் தொடங்கப்பட்டுள்ளன; ரூ. 2.50 இலட்சம் இதற்குச் செலவாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது."

முத்தையா:—"இராமேசுவரம் கோவிலில் உள்ள ஒரு கடையில் மெழுகு ஏற்றும் விளக்கிலிருந்து தீ விபத்து ஏற்பட்டதாக அமைச்சர் சொன்னார்; அந்த கடைக்காரர் கவனக் குறைவாக இருந்ததற்காக அவர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டதா?"

அமைச்சர்:—"அங்கு கடை வைத்துப் பிழைப்பவர்கள் சாதாரண ஏழைகள்; அவர்களிடம் நட்டஈடு வாங்க முடியாது; இராமேசுவரம் கோவிலைப் பொறுத்தவரையில் இம்மாதிரி விபத்துக்களுக்கு நிரந்தரத் தீர்வு காண்பதற்காகக் கோவிலுக்கு வெளியே நிரந்தரக் கடைகள் கட்டித்தர நடவடிக்கைகள் எடுத்து வருகிறோம்."

வீராசாமி:—"கோவில்களில் அகல் விளக்கு எரிக்கப்படுவதால் தீ விபத்துக்கள் ஏற்படக் காரணமாகலாம்; எனவே, மின் விளக்குகள் போடப்பட வேண்டும் என்று அரசு விதி கொண்டு வருமா?"

அமைச்சர்:—"அகல் விளக்கு ஏற்றப்படுவதை ஒரு முறையாக வைத்திருக்கிறார்கள்; அதில் தலையிட நாம் விரும்பவில்லை"

சுரேந்திரன் (இ. காங்):—"இராமேசுரம் கோவில் மிகப் பழமையான கோவில்; 'எல்லாமே தெய்வச் செயல்' என்று சொல்லப்படுவதால், 'இந்தத் தீ விபத்தும், தெய்வ விருப்பத்தின் காரணமாக நடந்திருக்கலாம்' என்று கருதி -- தீயை அணைக்காமல் விட்டிருக்கலாமல்லவா?"

முதலமைச்சர் (குறுக்கிட்டு):—"உறுப்பினர் இப்படிப்பட்ட கேள்விகளை அடிக்கடி கேட்பதன் மூலம், தன்னை ஒரு பழுத்த நாத்திகர் என்று இந்த அவைக்கும் -- நாட்டுக்கும் தெரிவித்துக் கொள்வதற்காக நன்றி."

கே. கே. கே. தங்கமணி:—"கோவில்களைச் சுற்றிக் கடைகள் கட்டுவதற்கு அரசு தடை விதிக்குமா?"

அமைச்சர்:—"மதுரை கோவிலைச் சுற்றியுள்ள கடைகளை அகற்றக் கூடாது -- என்று எதிர்ப்புத் தெரிவித்தார்கள்; அதனால் அத்திட்டம் கைவிடப்பட்டது; இராமேசுவரத்தில், கோவிலுக்கு வெளியே கடைகள் கட்டுவதற்கு முயற்சிக்கப்படுகிறது."

கல்வி நிலையங்களுக்கு அருகில் விற்கப்படும் தின்பண்டங்கள்

★

விற்பவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்படும்

அதிகாரிகட்கு உத்தரவு -- அமைச்சர் க. அன்பழகன் அறிவிப்பு

சென்னை, ஆக. 25—

"பள்ளிகள் போன்ற கல்வி நிலையங்களின் அருகில் வண்டிகளில் வைத்துக்கொண்டோ -- தலைச்சுமையாகவோ சுகாதாரக் குறைவான தின்பண்டங்கள், ஐஸ் கிரீம்கள் விற்பவர்களை அகற்றும்படி போலீசு இன்ஸ்பெக்டர்-ஜெனரலுக்கு அரசாங்கம் உத்தரவு பிறப்பித்திருக்கிறது" என்று மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் க. அன்பழகன், சட்டமன்ற மேலவையில் தெரிவித்தார்.

"மேற்சொன்ன விற்பனையாளர்களின் தின்பண்டங்களைச் சுகாதார இன்ஸ்பெக்டர்கள் மூலம் அடிக்கடி பரிசோதனை செய்யும்படியும், தவறு செய்யும் தின்பண்ட விற்பனையாளர்மீது வழக்குத் தொடர்ந்து நடவடிக்கை எடுக்கும்படியும் கேட்டுக்கொண்டு மாநகராட்சி ஆணையர், சுகாதார இயக்குநர் ஆகியோருக்கும் உத்தரவுகள் அனுப்பப்பட்டிருக்கின்றன" என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

இதுபற்றி உறுப்பினர்கள் கேட்ட கேள்விகளும் -- அமைச்சர் அளித்த பதில்களும் வருமாறு:—

சந்தோஷம் (ஐக்கியக் கட்சி):—"பள்ளிக்கூடங்களுக்கு அருகில் சுகாதாரமற்ற முறையில் இனிப்புப் பண்டங்களையும், வண்ண ஐஸ்களையும் விற்பது தடை செய்யப்படுமா?"

அமைச்சர்:—"தீங்கு விளைவிக்கக் கூடிய வண்ணங்கள் சேர்க்கப்பட்ட இனிப்புகள், வண்ண ஐஸ்கள் பள்ளிக்கூடங்களுக்கு அருகில் விற்பவர்கள்மீது நடவடிக்கை எடுக்கும்படி அதிகாரிகளுக்கு உத்தரவிட்டிருக்கிறோம்; அதேபோன்று, மூடாத பாத்திரங்களில் வண்டிகளில் வைத்துத் தின்பண்டங்கள் விற்பவர்கள் மீதும் நடவடிக்கை எடுக்கும்படி உத்தரவிட்டிருக்கிறோம்."

பலராமன் (ப.காங்):—"இப்படிப்பட்ட வண்ண ஐஸ்களை தின்பதால்தான் புற்றுநோய் (கேன்சர்) வருகிறது; கிராமப் பள்ளிகளிலும் அதை விற்கத் தடை செய்யப்படுமா?"

அமைச்சர்:—"எல்லா சுகாதார அதிகாரிகளுக்கும் அம்மாதிரி உத்தரவு அனுப்பப்பட்டிருக்கிறது; அத்துடன், பொதுமக்களும் -- அதிகாரிகளும் கவனமாக இருந்து இத்துறையில் அக்கறை செலுத்த வேண்டும்."

அமைச்சர் க. அன்பழகன்:—"எனக்குத் தெரிந்த தகவல்களின்படி, பல வண்ணப் படங்களை அச்சடித்து -- குழந்தைகளுக்கு மிட்டாய் போன்ற இனிப்புப் பொருள்களுடன் அதனைச் சேர்த்து விற்பதும், திரைப்பட நடிகைகள் படங்களையும் அவ்வாறு சேர்த்து விற்பதாகவும் தெரிகிறது; இதேபோல், ஐந்து ரூபாய் நோட்டு என்று ஏமாற்றும் நோக்கத்தில் அல்ல -- தோற்றம்தானே தவிர, இனிப்புப் பண்டங்களுடன் சேர்த்து விற்பதற்கே அவ்வாறு செய்திருக்கிறார்கள்; புலன் ஆராய்ந்து வருகிறோம்; தவறு நடக்காதபடி கவனித்துக் கொள்ளப்படுகிறது."

சாமிநாதன் (சுதந்):—"குடும்பக் கட்டுப்பாட்டு விளம்பரம் தாங்கிய அப்படிப்பட்ட படங்களைச் சிறுவர்களுக்கு விற்கக்கூடாது என்று தடைசெய்யப்படுமா?"

அமைச்சர்:—"பெரும்பாலும் பெற்றோர்களுக்கு இனிகுழந்தைகள் சான அறிவுறுத்த வேண்டும்."

கருத்தடை பிரச்சாரம்

தவறு நடக்காமல் கவனிக்கப்படும்

பலராமன் (ப. காங்):— "தமிழ்நாட்டில் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்ட விளம்பரம் தாங்கிய ஐந்து ரூபாய் நோட்டு போன்ற விளம்பரச் சீட்டுகள் 5 காசு வீதம் விற்கப்பட்டனவே -- அவை யாரால் அச்சடிக்கப்பட்டன?"

பண்டங்களுக்கு விலைக் கட்டுப்பாடு

நீதிமன்ற அதிகார வரம்பிலிருந்து பாதுகாப்பு

புதுடில்லி, ஆக. 25—

இன்றியமையாப் பண்டங்களின் விலைக் கட்டுப்பாட்டுத் திட்டங்களுக்கு, நீதிமன்ற நடவடிக்கைகளிலிருந்து பாதுகாப்பு அளிக்க மத்திய அரசு எண்ணியிருக்கிறது.

"இன்றியமையாப் பண்டங்களின் விலைக் கட்டுப்பாட்டுக்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளுக்குத் தலைமை நீதிமன்றத்தின் அதிகார வரம்பிலிருந்து எவ்வாறு பாதுகாப்பு அளிக்கலாம் என்பது பற்றி அரசு யோசித்து வருகிறது"

என்று மக்களவையில், தொழில் வளர்ச்சித்துறை துணையமைச்சர் சித்தேசுவர பிரசாத் தெரிவித்தார்.

சேலம் பகுதியில் சத்துணவுத் திட்டம்

சென்னை, ஆக. 25—

"சேலம் நகரில் குழந்தைகளுக்கும் -- கர்ப்பிணிப் பெண்களுக்கும் சத்துணவு வழங்கும் திட்டம் தொடங்கப்படுமா?"

என்று சட்டப் பேரவையில், கழக உறுப்பினர் ஜெபராமன் வினவினார்.

அமைச்சர் சத்தியவாணிமுத்து:—"சேலத்தில் 4,000 குழந்தைகளுக்கும், 746 பெண்களுக்கும் இந்தத் திட்டத்தின் மூலம் வழங்குவது பற்றி ஆலோசித்து வருகிறோம்."

சமுதாயத்தைக் கெடுப்பவர்களே கள்ளச் சாராயம் காய்ச்சுகின்றனர்

தொடர்ந்து தவறு செய்பவர்கள் தண்டிக்கப்பட்டே தீருவர்

ஆயத் தீர்வை சட்டத் திருத்த மசோதாவின் நோக்கம் -- அமைச்சர் செ. மாதவன் விளக்கம்

சென்னை, ஆக. 25—

கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்களுக்கு அதிக தண்டனை விதிக்க வகை செய்யும் ஆயத்தீர்வை (எக்சைஸ்) சட்டத் திருத்த மசோதா சட்டப் பேரவையில் நிறைவேறியது.

மசோதாவைத் தாக்கல் செய்து பேசுகையில் சட்ட அமைச்சர் செ. மாதவன் கூறியதாவது:—

"மதுவிலக்குச் சட்டம் ரத்து செய்யப்படும்போது கொண்டுவரப்பட்ட ஆயத் தீர்வை (எக்சைஸ்) சட்டத்தில் உள்ள சில குறைபாடுகள் காரணமாக அரசுக்குக் கிடைக்க வேண்டிய வருமானம் ஓரளவு பாதிக்கப்படும் நிலை ஏற்பட்டது; இந்தக் குறைபாடுகளை நீக்க இந்தத் திருத்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது.

இந்தச் சட்டத்தின்கீழ், குற்றம் செய்பவர்களுக்கு விதிக்கப்படும் தண்டனையை ஓரளவு கடுமையாக்கவும் வழிவகை செய்யப்பட்டிருக்கிறது.

இந்தச் சட்டம் குறித்த வழக்குகளை விரைவாகத் தீர்வு செய்வதற்கு மாஜிஸ்திரேட்டுகளுக்குக் கூடுதல் அதிகாரமும், தொடர்ந்து இந்தச் சட்டத்தின்கீழ் குற்றம் செய்பவர்களிடமிருந்து நன்னடத்தை ஜாமீன் மனு பெறவும் வழி செய்யப்பட்டுள்ளது.

சட்டத்தில் கொடுக்கப்பட்டுள்ள அதிகபட்ச தண்டனையின் அளவும் அதிகப்படுத்தப்பட்டுள்ளது; குறைந்த அளவு தண்டனையாக 6 மாத சிறை அல்லது அபராதம் அல்லது இரண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது."

மசோதா மீது பேசிய எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தேவைக்கு அதிகமான அதிகாரங்கள் மாஜிஸ்திரேட்டுகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று குறை கூறினர்.

விவாதத்துக்குப் பதிலளித்து அமைச்சர் மாதவன் பேசுகையில் கூறியதாவது:—

"நீதிமன்றங்களுக்கு அதிக அதிகாரம் கொடுக்கப்பட்டுவிட்டதால் நிரபராதிகள் யாரும் தண்டிக்கப்பட்டுவிட மாட்டார்கள்; இந்தத் திருத்தச் சட்டத்தின் கொள்கைகள், ஏற்கனவே உள்ள குற்றச் சட்டங்களில் உள்ளவைகள்தான்.

சமுதாயத்தைக் கெடுப்பவர்களை -- கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்களைத் தண்டிக்கவே இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

தவறு செய்பவர்கள் திட்டமிட்டுச் செய்கிறார்கள்; நிரூபிப்பதும் கடினமாக இருக்கிறது; நிரூபித்துவிட்டாலும் போதுமான அளவு தண்டனை கிடைக்காது; ஆகவேதான் கடுமையான தண்டனை கொடுக்கப்பட்டிருக்கிறது.

தொடர்ந்து திட்டமிட்டுத் தவறு செய்பவர்கள் தண்டிக்கப்படவே இந்தத் திருத்தச் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது."

மாவட்டங்களில் வறட்சி நிலைமை

மதிப்பிட்டு அறிவிக்கத் தமிழக அரசு உத்தரவு

சென்னை, ஆக. 25—

"சில மாவட்டங்களில் பாதகமான பருவ நிலைமைகள் நிலவுவது பற்றி அறிக்கைகள் அரசுக்குக் கிடைத்ததால், வறட்சி நிலைமைகளை மதிப்பிட்டு அரசுக்கு அறிக்கை அனுப்புவதற்காக வருவாய் வாரிய உறுப்பினர்கள், மாவட்டங்களில் சுற்றுப்பயணம்செய்ய வேண்டும் என்று கடந்த மே மாதம் அரசு உத்தரவிட்டது"

என்று சட்டமன்ற மேலவையில், வருவாய்த்துறை அமைச்சர் ப. உ. சண்முகம், கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்; இத்தொடர்பில் மேலும் அவர் கூறியதாவது:—

"ஆனால் இதற்குப் பின்னர், மாவட்டங்களில் நல்ல மழை பொழிந்ததால், நிலைமை கணிசமான அளவுக்கு முன்னேற்றமடைந்தது; இதுபற்றி மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

ஆயினும், மாவட்டங்களில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு, நிலைமையை மதிப்பிட்டு அரசுக்கு அறிக்கை அனுப்புமாறு அண்மையில் வருவாய் வாரிய உறுப்பினர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்; ஒரு வாரத்திற்குள் அறிக்கை கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது; அறிக்கை வந்தபின் தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்படும்."

கோவிலில் தமிழில் அர்ச்சனை

எதிர்த்து மறியல் செய்தவர்கள் யார்?

சென்னை, ஆக. 25—

"சென்னை தங்கசாலைத் தெருவிலுள்ள கோவிலில், 11—8—71 அன்று தமிழ் அர்ச்சனை துவக்கப்பட்டதா? 'ஆம்' எனில் தமிழ் அர்ச்சனை துவக்க விழாவில் -- தமிழில் அர்ச்சனை செய்வதை எதிர்த்து மறியல் நடத்தப்பட்டதா?

என்று, சட்டமன்ற மேலவையில், திருஞானசம்பந்தர் வினவினார்.

முதலமைச்சர்:—"சென்னை தங்கசாலை ஏகாம்பரேசுவரர் கோவிலில், அறநிலைய அமைச்சரால் தமிழ் அர்ச்சனை 12—8—71-ல் தொடங்கி வைக்கப்பட்டது; ஆனால், 11—8—71-ல் அல்ல.

"சென்னை கோவில் அர்ச்சனை பாதுகாப்புச் சங்கத்தைச் சேர்ந்த 9 பேர், கோவில்களில் தமிழ் அர்ச்சனை செயலுக்குக் கொண்டுவரப்பட்டதைஎதிர்த்து அமைச்சருக்குமுன் ஆர்ப்பாட்டம் செய்தனர்; அவர்களைப் போலீசார் கைது செய்து வழக்குத் தொடர்ந்ததில் சென்னை 4-வது மாவட்ட மாஜிஸ்திரேட் அவர்களுக்கு அபராதம் விதித்துத் தீர்ப்புக் கூறினர்."

வாழைத் தோட்டத்துக்கு விதிவிலக்கு இல்லை

புதிய சட்டத்தின்மூலம் உறுதி செய்யப்பட்டது

சென்னை, ஆக. 23—

உச்ச வரம்புச் சட்டத்தின்கீழ் அளிக்கப்பட்ட விதிவிலக்கும் பட்டியலில் வாழைத் தோட்டங்களையும் சேர்க்கவேண்டும் -- என்று சென்னை உயர்நீதி மன்றம் அளித்த தீர்ப்பைத் தொடர்ந்து வாழைத் தோட்டங்களுக்கும் உச்சவரம்புச் சட்டத்தின்கீழ் விதிவிலக்கு இல்லை என்பதைத் தெளிவுபடுத்தும் வகையில் திருத்த மசோதா ஒன்றை சட்டப் பேரவையில் வருவாய்த்துறை அமைச்சர் ப.உ. சண்முகம் தாக்கல் செய்தார்.

1959-ம் ஆண்டு ஜூலை முதல் தேதியோ அதற்கு முன்போ மாற்றப்பட்ட பழத் தோட்டங்கள் -- தோப்புகள் -- பாக்குத் தோட்டங்கள் ஆகியவற்றின் நிலங்களுக்கு நில உச்சவரம்புச் சட்டத்திலிருந்து விதிவிலக்கு அளிக்கப்பட்டிருந்தது; வாழையும் பழம்தரும் மரமாதலால் பழத் தோட்டங்கள் -- தோப்புகளுக்கு நில உச்சவரம்பு சட்டத்தின் கீழ் அளிக்கப்பட்ட விதிவிலக்கு வாழைத் தோட்ட நிலங்களுக்கும் பொருந்தும் என்று அண்மையில் சென்னை உயர்நீதிமன்றம் தீர்ப்பு அளித்திருந்தது.

இந்தத் தீர்ப்புக் காரணமாகச் சட்டத்தில் ஏற்பட்ட ஓட்டையை அடைக்க இம்மசோதா கொண்டு வரப்பட்டது.

இதைத் தொடர்ந்து, 'வாழைத் தோட்டங்களுக்கு உச்ச வரம்புச் சட்டத்திலிருந்து விதிவிலக்கு இல்லை' என்று இம்மசோதா வகை செய்கிறது.

நாமக்கல் கவிஞர் மறைவு

அமைச்சர்கள் இறுதி மரியாதை

கலைஞர் இரங்கற் செய்தி

சென்னை ஆக. 25—

நாமக்கல் கவிஞர் வே. இராமலிங்கம் (பிள்ளை) அவர்கள் நேற்று விடியற்காலை 3-மணியளவில் இயற்கையெய்தினார் என்ற செய்தியை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

அவருக்கு வயது 85; அவருடைய உடல் இன்று காலை சிதுஷ்ணம்பேட்டை இடுகாட்டில் அடக்கம் செய்யப்பட்டது.

நேற்று நள்ளிரவு நாமக்கல் கவிஞர் நன்றாகவே இருந்தார்; படுக்கச் செல்லும்போது உற்சாகமாகவே காணப்பட்டார்; படுத்த சிறிது நேரத்துக்கெல்லாம் 'நெஞ்சு வலிக்கிறது' என்றார்; உடனடியாக டாக்டர்கள் வரவழைக்கப்பட்டனர்; என்றாலும் அதிகாலை 3 மணியளவில் அவருடைய உயிர் பிரிந்துவிட்டது.

அமைச்சர்கள் இறுதி மரியாதை

முதலமைச்சர் கலைஞர், அமைச்சர்கள் நாவலர், ப. உ. சண்முகம், க. இராசாராம், மற்றும் சிலம்புச்செல்வர் ம.பொ. சிவஞானம், ஔவை டி.கே. சண்முகம், பல்கலைக்கழகத் துணைவேந்தர் நெ.து. சுந்தரவடிவேலு ஆகியோர் ஆழ்வார்பேட்டை சீத்தம்மா காலனியில் உள்ள கவிஞரின் இல்லத்துக்குச் சென்று இறுதி மரியாதை செலுத்தினர்.

சட்டப் பேரவை--மேலவை இரங்கல்

நாமக்கல் கவிஞரின் மறைவுக்கு நேற்று காலை தமிழ்நாடு சட்டப் பேரவையும், பிற்பகலில் மேலவையும் இரங்கல் தெரிவித்துக் கொண்டன; உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிட நேரம் மவுனமாக எழுந்து நின்று மரியாதை செலுத்தினர்.

கலைஞர் இரங்கற் செய்தி

"மறைந்த நாமக்கல் கவிஞர் அவர்கள், தேசியப் பாடல்கள் மூலமும் -- தியாகச் செயல்கள் மூலமும், தமிழ்நாட்டு மக்களின் பேரன்பைப் பெற்றவராவார்.

"அவரது மறைவால், தமிழகம் ஈடு செய்ய இயலாத ஓர் இழப்பிற்கு ஆளாகியிருக்கிறது."

சிவாஜி கணேசன் தாயார் மறைவு

குடும்பத்தினருக்குக் கலைஞர் ஆறுதல்

சென்னை ஆக. 24—

நடிகர் சிவாஜி கணேசன் அவர்களின் அன்னையார் இராஜாமணி அம்மையார், இன்றிரவு 9 மணியளவில் இயற்கையெய்தினார்.

செய்தியறிந்ததும், முதலமைச்சர் கலைஞர் அவர்கள், சிவாஜி கணேசன் இல்லத்திற்குச் சென்று அவருக்கும் -- அவரது குடும்பத்தினருக்கும் ஆறுதல் கூறினார்.

கலைஞர் அவர்களுடன் அன்பில் தர்மலிங்கம், இராம. அரங்கண்ணல், பராங்குசம் ஆகியோர் சென்றிருந்தனர்.

கலைஞரின் இரங்கற் செய்தி

"அருமை நண்பர் சிவாஜி கணேசன் அவர்களுடைய அன்னையார், என்னிடத்தில் என் அன்னையார்போல அன்பு காட்டியவர்களாவார், அவரது மறைவு தாங்கொணாத வேதனையைத் தருகிறது.

நண்பர் சிவாஜிக்கும் -- அவரது குடும்பத்தினருக்கும் என் ஆழ்ந்த அனுதாபங்கள் உரித்தாகுக."

சிக்கனத் திட்டம்

மிச்சம் எவ்வளவு?

முதலமைச்சர் தகவல்

ஜி. சுவாமிநாதன்:—"மாநில அரசு மேற்கொள்ள வேண்டிய சிக்கன நடவடிக்கைகள் குறித்து ஏதாவது கருத்துரைகளை மத்திய அரசு தெரிவித்துள்ளதா? 'ஆம்' என்று அதுகுறித்து மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் யாவை?"

முதல்வர்:—"சிக்கன நடவடிக்கைகள் குறித்து மத்திய அரசு கருத்துத் தெரிவித்தது; அதன்படி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன"

சாடிநாதன்:—"இதனால் சிக்கனம் ஏற்பட்டதா?"

முதல்வர்:—"சிக்கனம் ஏற்பட்டது; இதனால் செலவும் குறைந்தது -- பணமும் மிச்சப்பட்டது."

மேலும் இது குறித்து எழுந்த பல வினாக்களுக்கு முதலமைச்சர் அளித்த பதிலாவது:—

"இத்திட்டம், அரசாங்கச் சிப்பந்திகளைப் பற்றியதல்ல; திட்டப் பணிகள் -- தேவையற்ற விழாக்கள் ஆகியவைகளில் பொறுத்த மட்டில் சிக்கன நடவடிக்கை மேற்கொள்ளுமாறு மத்திய அரசு தாக்கீது அனுப்பியது; அதன்படி இத்திட்டம் மேற்கொள்ளப்பட்டது; இதன் மூலம் எவ்வளவு தொகை மிச்சப்பட்டது என்பதை வெளிப்படையாகச் சொல்வதற்கில்லை."

கரும்புச் சக்கையிலிருந்து காகிதம்

தமிழகத்தில் அமையும்

அமைச்சர் மாதவன் தகவல்

சென்னை, ஆக. 23—

"கரும்புச் சக்கையிலிருந்து காகிதம் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றைத் தமிழகத்தில் தொடங்கும் திட்டம், அரசின் பரிசீலனையில் இருக்கிறது"

என்று சட்டப் பேரவையில், கழக உறுப்பினர் என். கிட்டப்பாவின் கேள்விக்குப் பதிலளிக்கையில், தொழில் அமைச்சர் செ. மாதவன் தெரிவித்தார்; அவர் மேலும் கூறியதாவது:—

"தமிழ்நாட்டில் சர்க்கரை ஆலைகளிலிருந்து 9 இலட்சம் டன் கரும்புச் சக்கை கிடைக்கிறது; என்றாலும், இவை பெரும்பாலும் எரிபொருளாகவே பயன்படுத்தப்படுகிறது; எனவே, மாற்று எரிபொருள் கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டியிருக்கிறது."

சட்டப் பேரவையில் முதலமைச்சர் விளக்கம்

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

"ஆகவே, இவ்வளவு கட்டுதிட்டத்தோடு -- சட்டப்படி இந்த நிதி இன்றைக்குச் செலவழிக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

"பெரிய காரியங்களுக்கு இப்படிப்பட்ட ஊனங்களை -- குந்தகங்களை -- மாசு கற்பிக்கின்ற தன்மைகள் சேர்ப்பதைப் பெரியவர்கள் விட்டுவிட வேண்டும் என்பதற்காகத் தான் இதை நான் சொல்லுகிறேன்."

இதன்தொடர்பில் முதலமைச்சர் மேலும் குறிப்பிட்டதாவது :—

"இத் திட்டத்திற்கு ரூ. 40 இலட்சம் அல்லது ரூ. 45 இலட்சத்தை அரசாங்கமே செலவு செய்கிறது என்று கே. டி. கே. தங்கமணி அவர்கள் சொன்னார்கள்; அதற்கு அடுத்த வாக்கியத்தை அவர் படிக்காததற்காக நான் மிகவும் வருந்துகிறேன்; இது குறித்துத் தொடக்கத்தில் ஆகும் ரூ. 45.40 இலட்சம் செலவுக்கு மானியம் 14 வகை செய்கிறது; என்பதோடு முடியவில்லை; 'இததொகை நாளாவட்டத்தில் கண்ணொளி வழங்கும் திட்டத்திலிருந்து நேர் செய்யப்படும்' என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

கண்ணொளி வழங்கும் திட்டத்திற்கு என்னுடைய பிறந்த நாளன்று நான விடுத்த வேண்டுகோளுக்கும் -- மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் விடுத்த வேண்டுகோளுக்கும் இணங்க இது வரை ரூ. 12 இலட்சம் நிதியாகச் சேர்ந்திருக்கிறது; மேலும் பல இலட்சம் ரூபாய் சேருமென்று எதிர்பார்க்கிறோம்.

பிச்சைக்காரர் மறுவாழ்வு நிதிக்காக சென்ற ஆண்டு ரூ. 40 இலட்சம் கேட்டோம்; ஒரு கோடி ரூபாய்க்குமேல் தமிழ்நாட்டு மக்கள் அதற்கு நிதியாகத் தந்திருக்கிறார்கள்; ஆகவே கண்ணொளி வழங்கும் திட்டத்திற்கும் அரசாங்கம் தொடக்கத்தில்செலவழித்தாலும், நாளடைவில் இதற்காக வந்துகுவிய இருக்கின்ற நிதியிலிருந்து நேர் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எந்த ஒரு பெரிய நல்ல காரியத்தை இந்த அரசாங்கம் முன்னின்று செய்தாலும், அந்த நல்ல காரியங்களை -- பரவலாகக் கிடைக்கின்ற பயனைப் பாராட்டுவதற்குப் பதிலாக, அங்கொன்றும் இங்கொன்றுமாக நடந்துவிடுகின்ற குறைபாடுகளைப் பெரிதுபடுத்திப் பேசி வருவது உள்ளபடியே வருந்தத்தக்க ஒன்றாகும்.

ஒரு பெரியவர், 'மூக்குக் கண்ணாடிக் கடைக்காரர்களுக்கு வியாபாரம் நடக்க வேண்டுமென்பதற்காக கண்ணொளி வழங்கும் திட்டத்தை ஆரம்பித்து கண்ணாடிகளை வழங்கிக் கொண்டிருக்கிறார்கள்' என்று பேசியிருக்கிறார்.

சில பத்திரிகைகள் இத்திட்டத்தைப் பாராட்டுவதற்குப் பதிலாக; 'ஒரு கண்ணாடியின் விலை ரூ. 15 என்றால், ஆயிரம் கண்ணாடிகள் வழங்குவதற்கு ரூ. 15,000 மட்டுமே தான் செலவு; இதற்குப்போய் ஓர் இலட்சம் ரூபாய் செலவா' என்று எழுதியிருக்கின்றது.

கண்ணாடி வழங்குவது என்பது, கண் சிகிச்சை முடிந்து ஒரு வாரத்திற்குப் பிறகோ -- பத்து நாளைக்குப் பிறகோ இறுதியாக நடைபெறுகின்ற நிகழ்ச்சியாகும். அதற்கு முன்பு அங்குள்ள நோயாளிகளுக்குத் தகுந்த வசதிகள் அளித்து -- அவர்களுக்கு உணவு -- உறையுள் போன்ற வசதி வாய்ப்புகள் அளித்து -- அறுவைச் சிகிச்சை செய்து -- அதற்குப் பணியாளர்கள் மற்றும் அங்கு ஊழியம் புரிய அந்தந்தப் பகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்படுகின்ற தொண்டர்களுக்கெல்லாம் ஆகின்ற செலவுகளை வைத்துப் பார்த்தால் ஒரு நாளைக்குக் கிட்டத்தட்ட ஒரு நோயாளிக்கு ரூ. 50 லிருந்து ரூ. 60-வரை செலவாகும் நிலை இருக்கிறது.

ஆகவே, ஆயிரம் பேருக்கோ -- இரண்டாயிரம் பேருக்கோ முகாமில் கண்ணொளி வழங்குவதற்கு எவ்வளவு செலவாகும் என்பதைக் கணக்கிட்டுப் பார்த்துக் கொள்ளலாம்.

ஏதோ -- வெறும் கண்ணாடி வழங்குவது மாத்திரம் திட்டமல்ல; கண்ணாடி வழங்கிவிடுவதால் கண்ணொளி வந்துவிடாது; அறுவைச சிகிச்சைக்குப் பிறகுதான் கண்ணாடியைப் பயன்படுத்த முடியும்.

டாக்டர் வெங்கடசாமி போன்றவர்களைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்று சொன்னார்கள்; நான் உள்ளபடியே வருத்தப்படுகிறேன்; இந்தத் திட்டத்திற்காக முதன் முதலிலேயே நாங்கள் யோசனை கேட்டது டாக்டர் வெங்கடசாமி அவர்களிடத்தில் தான்; இப்போதும் பெரும் பகுதி அவருடைய தலைமையில் தான் நடக்கிறது; ஒரு அணிக்குத் தலைவராக இருந்து கொண்டு இந்தத் திட்டத்தை நிறைவேற்றி வருகின்ற டாக்டர்களில் ஒருவராக வெங்கடசாமி அவர்கள்தான் இருந்து வருகிறார். எனவே, நாங்கள் அவரைப் பயன்படுத்திக் கொள்ளவில்லை என்று கூறுவதிலிருந்து இந்த அரசாங்கத்தின் நல்ல நடவடிக்கைகளை எல்லாம் பார்க்கக்கூடாது -- படிக்கக்கூடாது என்று ஒதுக்கி விடுகிறார்கள் என்றுதான் தோன்றுகிறது.

ஒவ்வொரு கண் சிகிச்சை முகாமிலும் டாக்டர் வெங்கடசாமி அவர்கள்தான் வரவேற்றுப் பேசுகிறார்; நோயாளிகளைப் பார்வையிட்டு ஆய்வு நடத்துகிறார்; அங்கிருக்கும் டாக்டர்கள் பணியை மேற்பார்வையிட்டு மருந்துகளைத் தெரிவிக்கிறார்; ஆகவே, டாக்டர் வெங்கடசாமி அவர்களைப் பயன்படுத்திக்கொள்ள இயலாது -- ஏற்கனவே நாங்கள் அவரைப் பயன்படுத்திக்கொண்டு வருகின்ற காரணத்தால்!

யார் தவறு செய்தாலும் நடவடிக்கை எடுக்க அரசு தயங்காது

பல ஆயிரம் லிட்டர் எண்ணெய் பறிமுதல் செய்யப்பட்டது

★

அனுமதியின்றி விற்றவர்கள் கைது -- வழக்குத் தொடரப்பட்டிருக்கிறது

சட்டமன்ற மேலவையில் ப. உ. சண்முகம் தகவல்

சென்னை, ஆக. 25—

சென்னை நகரில் அனுமதி இல்லாமல் விற்பனைக்கு வைக்கப் பட்டிருந்த 6000 லிட்டர் பெட்ரோல் -- மண்ணெண்ணெய் ஆகியவற்றை அதிகாரிகள் பறிமுதல் செய்தனர்.

இந்தத் தகவலை அமைச்சர் ப.உ. சண்முகம் அவர்கள், சட்டமன்ற மேலவையில், பொது விற்பனை வரிச் சட்டத்தின்மீது நடைபெற்ற விவாதத்திற்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்; இத்தொடர்பில் அவர் விளக்கிக் கூறியதாவது :—

"சென்னையில் பல இடங்களில் லைசென்சு இல்லாமல் பெட்ரோல் -- மண்ணெண்ணெய் விற்பனை செய்வதாகப் புகார் தெரிவிக்கப்பட்டது.

சென்னை நகரில் 8 இடங்களில் ஒரே நேரத்தில் திடீரெனச் சோதனைகள் நடத்தப்பட்டன; அந்தச் சோதனையில் 3,285 லிட்டர் பெட்ரோல் -- 3,630 லிட்டர் மண்ணெண்ணெய் -- 260 லிட்டர் டீசல் -- 35 லிட்டர் எஞ்சின் ஆயில் -- 6½ லிட்டர் டீசல் கலந்த கலப்பு எண்ணெய் ஆகியவை கண்டு பிடிக்கப்பட்டன; அவைகள் அனைத்தும் பறிமுதல் செய்யப்பட்டன.

இதையொட்டி 11 பேர் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்; அவர்கள்மீது வழக்குத் தொடரப்பட்டுள்ளது; தீர்ப்பு நீதிமன்றத்தை பொறுத்தது.

யார் தவறு செய்தாலும், அவர்கள்மீது நடவடிக்கை எடுக்க இந்த அரசு தயங்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்."

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, முரசொலி அச்சகத்தில் (84, ...) ... [illegible]

கவுந்தப்பாடியில் கலைஞர்--- நாவலர் பிறந்த நாள் விழா

கவுந்தப்பாடி பகுத்தறிவு மன்றச் சார்பில் கழகத் தலைவர் கலைஞர்—பொதுச்செயலாளர் நாவலர் ஆகியோர் பிறந்த நாள் விழா 26-8-72 மாலை 3-மணியளவில், கவுந்தப்பாடி மகளிர் உயர்நிலைப் பள்ளியில் பவானி வட்ட தி. மு. க. செயலாளர் இரா. துரை தலைமையில்நடைபெறும்; முதன்மைக் கல்வி அதிகாரி திருமதி சி. விசாலாட்சி, மாணவிகளுக்குச் சீருடையும், புத்தகமும் வழங்குவார்; சிறப்புச் சொற்பொழிவு: பி.ஏ. சாமிநாதன் எம்.பி., ஏ.எம். இராசா எம்.எல்.ஏ., ஜி. என். இராசு எம்.எல்.சி., ஜி. ரகோத்தம ராவ், ஜி. பி. வெங்கிடு எம்.சி., எம். ஆர். பொன்னுசாமி, இரா. நடராசன், கே. ஆர். மாணிக்கம், முத்துசாமி.

நிழல் தரும் மரங்கள் அன்று பயன்பட்ட நிலை

கல்வியமைச்சர் நாவலர் விளக்கம்

சென்னை, ஆக. 24—

"அணி -- தேர் -- புரவி -- ஆட்பெரும் படையோடு மன்னருக்கு இருக்க நிழலாகுமே' என்று அந்தக் காலத்தில், மரத்தின் அவசியத்தைப் பற்றிப் பாடியிருக்கிறார்கள்; ஆனால் இந்தக் காலத்தில், சென்னை நகர சாலைகளில் உள்ள மரங்களையெல்லாம் வெட்டிவிடுகிறார்கள்; சாலைகளில் மரங்கள் வைக்க ஏற்பாடு செய்யப்படுமா?"

என்று சட்டப் பேரவையில், என். கிட்டப்பா வினவினார்.

அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் :—"அணி -- தேர் -- புரவியோடு அரசன் தங்குவதற்குத் தான் அந்த மரம் பயன்பட்டது; ஆனால், இங்கு சாதாரண மக்கள் போக வேண்டும்; கார் -- பஸ்கள் போவதற்கு வழி வேண்டுமே; எனவே தான் நிழல் தரும் மரங்களை வெட்டிச் சாலைகளை அகலப் படுத்த வேண்டியிருக்கிறது."

"சென்னை நகரத்தில் நெரிசல் அதிகமாகி வருகிறது; இப்படி எல்லாம் ஆகும் என்று தெரியாததால்தான், முன்பெல்லாம் நெருக்கமாக மரங்களை வைத்துவிட்டனர்; சில இடங்களில் மரத்தை வெட்டிவிட்டு -- அகலமான முறையில் புதியதாக மரத்தை வைத்திருக்கிறோம்.

"இப்போதெல்லாம் சிறிய கன்றாக நடாமல் சுமார் 6 -- 7 அடி உயரம் வளர்ந்த மரத்தையே வேரோடு பிடுங்கிப் புதிய இடத்தில நட்டுவது சுலபம்; அதையே மாநகராட்சி செய்துவருகிறது."

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டம்

26--8--72

வேதாரண்யம்

தி. மு. க. சார்பில் மாலை 6-மணிக்கு இராசாசி பூங்காவில்; தலைவர்: ரெ. இராதாகிருட்டிணன்; பேசுவோர்; திருப்பத்தூர் இராமமூர்த்தி, மா. மீனாட்சி சுந்தரம் எம்.எல்.ஏ., சிவ. கனக சுந்தரம், செ. யூசுப், வே. கோதண்டபாணி.

உணவு -- வருவாய்த் துறை அமைச்சர்

ப. உ. சண்முகம்

நிகழ்ச்சிகள்

ஆக. 27 காலை 8-15 மணி: சோமண்டார்குடி (கள்ளக்குறிச்சி வட்டம்); 10 மணி: கள்ளக்குறிச்சி; 10 30 மணி: மேல்நாரியப்பனூர்.

ஆக. 28 காலை 9 மணி: கீரனூர்—நீர்த்தேக்கம் திறப்பு; 9-30 மணி: பசுங்கரை—நீர்த்தேக்கம் திறப்பு; 10 மணி: செல்லங்குப்பம்—நீர்த்தேக்கம் திறப்பு; 10-30 மணி: இராஜந்தாங்கல்—நீர்த்தேக்கம் திறப்பு; 11 மணி: சடலூர்—நீர்த்தேக்கம் திறப்பு; 11-30 மணி: நீலாந்தாங்கல—புதிய பள்ளிக்கட்டடம் திறப்புவிழா; மாலை 4-30 மணி: ஆலூர்—நீர்த்தேக்கம் திறப்பு புதிய பள்ளிக்கட்டடம் திறப்பு -- மேநீர் தேக்கத் தொட்டி திறப்பு அடிக்கல் நாட்டுவிழா; 5-30 மணி: வைப்பூ—நீர்த்தேக்கம் திறப்பு; 6 மணி: வேட்டவலம்—நீர்த்தேக்கம் திறப்பு -- அரிசன வாலளி புதிய பள்ளி திறப்பு.

திருக்கழுக்குன்றம் பேரூராட்சிக் கட்டடக் கால்கோள் விழா

27—8—72 மாலை 5 மணியளவில், திருக்கழுக்குன்றம் பேருந்து நிலையம் அருகில், செ. கோ. வசுவநாதன் எம்.எல்.ஏ. தலைமையில் தந்தை பெரியார் அவர்கள் திருக்கழுக்குன்றம் பேரூராட்சி அலுவலகக் கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டுவார்.

வண்ணைப் பகுதி தி.மு.க. தோழர்கட்கு :

"வண்ணைப் பகுதி தி. மு. கழக உறுப்பினர்கள் கூட்டம் 27 8-72 காலை 10-மணியளவில், இராயபுரம் 'அறிவக'த்தில் நடைபெறும்; அதுபோது, பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாள் விழாவைச் சிறப்பாகக் கொண்டாடுவது பற்றி ஆலோசித்து முடிவெடுக்கப்படும்; பகுதிக் கழக உறுப்பினர்கள் தவறாது வருகை தருமாறு கேட்டுக் கொள்கிறேன்"

என்று பகுதிச் செயலாளர் பி. ஏ. என். இராசரத்தினம் அறிவிக்கிறார்.

(1-ம பக்கத் தொடர்ச்சி)

அரசு முழு அளவில் நிதியுதவி அளிக்கும்.

தஞ்சை மாவட்டத்தில் 33,592 குடும்பங்களுக்குத் தலா 2 செண்ட் நிலம் வழங்கப்படும்; இதற்காக நிலம் கையகப்படுத்துவதற்கு ரூ. 45 இலட்சம் செலவாகும்.

நிலம் கையகப்படுத்தும் பணியைத் துரிதப்படுத்தி 6 மாதத்தில் முடிக்க தனி ஊழியர்கள் நியமிக்கப்படுகிறார்கள்.

இந்தத் திட்டத்தின்கீழ் சாலைகள் -- வடிகால் வசதிகள் போன்ற வசதிகளை மாநில வீட்டு வசதி வாரியம் அளிக்கும்.

திருமணங்கள்

27—8—72 காலை 10-மணியளவில் உடையார்பாளையம் வட்ட தி. மு. க. செயலாளர் சு. கோ. கணேசன்—செல்வி மணிமேகலை திருமணம் செயங்கொண்டம் பிரிமியர் கலா கலை அரங்கில் கழகத் தலைவர் கலைஞர் தலைமையிலும்—பொதுச்செயலாளர் நாவலர், சட்டப் பேரவைத் தலைவர் கே. ஏ. மதியழகன் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெறும்; வரவேற்புரை: அன்பில் தர்மலிங்கம் எம். எல். ஏ.; அமைச்சர் பெருமக்களும், நாடாளுமன்ற—சட்டமன்ற உறுப்பினர்களும், கழக முன்னணியினரும் வாழ்த்துரை வழங்குவர்.

27—8—72 காலை 8-30 மணியளவில், திருச்சி கண்டோன்மென்ட் சரசுவதியம்மாள் பங்களாவில் வழக்கறிஞர் ந. நல்லுசாமி—ஜி. இராமேசுவரி திருமணம் கழகத் தலைவர் கலைஞர் தலைமையில்—பொதுச்செயலாளர் நாவலர் முன்னிலையில் நடைபெறும்; வரவேற்புரை: அன்பில் தர்மலிங்கம் எம்.எல்.ஏ.; வாழ்த்துரை வழங்குவோர்: மதுரை மேயர் எஸ். முத்து, அமைச்சர் பெருமக்கள், கழக முன்னணியினர்.

27—8—72 காலை 10 மணியளவில், காட்டுப்புத்தூர் மருத்துவமனை சாலையிலுள்ள இராஜாமணி திரையரங்கில், அமைச்சர் எஸ். ஜே. சாதிக் பாட்சா தலைமையில், திரு. ஆர். நாகசுந்தரம் அவர்களின் மகள் செல்வி: தனலட்சுமிக்கும் -- செல்வன்: கா. ஏ. மஞ்சனத்துக்கும் திருமணம் நடைபெறும்.